பயிற்சி

படித்துப் பழகுக

கூரான கொம்புகள் நீண்ட தும்பிக்கை

கருப்புப் புள்ளிகள்

உருண்டையான திமில் கருப்பு வெள்ளை வரிகள்

எழுதிப் பழகுக

நண்பர் திமில் தும்பிக்கை கொம்புகள்

வரிகள் ஒட்டகச்சிவிங்கி கழுத்து

பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

SBG31I

1. நீண்ட தும்பிக்கை உடையது யானை. ☐
2. ஒட்டகச் சிவிங்கியின் முதுகில் திமில் இருக்கும். ☐
3. சிறுத்தையின் உடலில் கருப்பு வெள்ளை வரிகள் இருக்கும். ☐
4. வரிக்குதிரைக்குக் கொம்புகள் இல்லை. ☐
5. மாட்டிற்குக் கூரான கொம்புகள் இருக்கும். ☐

பொருத்துக

1.	நான்கு கால்கள், கூரான கொம்புகள்	–	ஒட்டகம்
2.	பெரிய உருவம், நீண்ட தும்பிக்கை	–	வரிக்குதிரை
3.	நீண்ட கால்கள், கருப்பு வெள்ளை வரிகள்	–	யானை
4.	நீண்ட கழுத்து, உருண்டையான திமில்	–	மாடு

வாய்மொழியாக விடை தருக

1. இக்கதையில் புது நண்பர் எவ்வாறெல்லாம் வருணிக்கப்படுகிறார்?

விடை எழுதுக

1. உடலில் கருப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு எது?
2. புதிதாக வந்த நண்பர் யார்?

ஆதிரையின் பெட்டியில்...

இவள் ஆதிரை. சின்னச் சின்னப் பொருள்களைத் தேடித் தேடிச் சேர்த்து வைப்பாள்.

இது, ஆதிரையின் பெட்டி. எத்தனை பொருள்கள் பாருங்களேன்!

சேர்த்து வைத்தவை பற்றி எழுதி வைப்பது ஆதிரையின் வழக்கம்.

இதுபோல நீங்களும் சேகரிப்பது உண்டா? அவற்றைப் பற்றியும் எழுதலாமே!

2nd_std_2nd_term_tamil.indd 74 31-03-2019 14:01:31

ஆறு வேறுபாடுகளைக் கண்டுபிடித்து வட்டமிடுக

உற்றுநோக்கு → சேர் → உருவாக்கு

சேர்ப்போம் உருவாக்குவோம்



பல்வேறு உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்

குட்டிக்குரங்கின் ஒருநாள்...

2nd_std_2nd_term_tamil.indd 76 31-03-2019 14:01:34

வேரில் பழுத்த பெரிய பலா
வேண்டும் அளவு தின்றிடுவேன்

குளத்தின் குளிர்ந்த நீரிலே
குதித்து விளையாடிடுவேன்

வளைந்த கிளையில் வாலைச்சுருட்டித்
தலைகீழாகத் தொங்கிடுவேன்

அம்மா என்னைத் தேடும் முன்னே
விரைந்து ஓடிச் சேர்ந்திடுவேன்

2nd_std_2nd_term_tamil.indd 77 31-03-2019 14:01:35

12. பூம்வண்டி

பூம்பூம் பூம்பூம் பூம்வண்டி
புறப்படப் போகுது ஏறிடுங்க
ஆயிஷா வண்டியின் ஓட்டுநராம்
நளனும் ஜெரினும் பயணிகளாம்

தலைநகர் டெல்லி பார்த்திடலாம்
ஸ்ரீநகர்கூட போய் வரலாம்
காடு மலைகள் பலதாண்டி
கடக்கப் போகுது பூம்வண்டி

ஆக்ரா நகரின் தாஜ்மஹால்
காஷ்மீர் ரோஜாத் தோட்டங்கள்
பார்க்க அழைக்குது பூம்வண்டி
புறப்படப் போகுது ஏறிடுங்க

2nd_std_2nd_term_tamil.indd 78 31-03-2019 14:01:36

படித்தும் எழுதியும் பழகுக

ஜ் ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே
ஜை ஜொ ஜோ

ஸ் ஸ ஸா ஸி

ஷ் ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை

ஹ் ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை

ஸ்ரீ

எவரெஸ்ட்

ரோஜா

தாஜ்மஹால்

ஷாஜஹான்

ஜான்சி ராணி



ஜவஹர்லால் நேரு

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ்

ரம்ஜான், கிறிஸ்துமஸ், பாகிஸ்தான், ஜப்பான்,
அஸ்ஸாம், காஷ்மீர், ஸ்ரீநகர், ஜாங்கிரி, ஜிலேபி,
குலாப் ஜாமூன், பாதுஷா, பஜ்ஜி

2nd_std_2nd_term_tamil.indd 79 31-03-2019 14:01:39

எறும்பூரில் இனிப்பு விழா

2nd_std_2nd_term_tamil.indd 80 31-03-2019 14:01:41

பயிற்சி

யாரைப் போல் வேடமிட்டுள்ளனர்? பெயர்களை எழுதுக

6WWFU2

படம் பார்த்துப் பெயர் எழுதுக

2nd_std_2nd_term_tamil.indd 81 31-03-2019 14:01:43

13. வாழ்த்தலாம் வாங்க

KICTMK

பர்வீன் படம் வரைந்துகொண்டு இருந்தாள். அப்போது அஜ்மல் வந்தான்.

"ஐ! மயில். அழகாக உள்ளது, அக்கா" என்றான் அஜ்மல்.

"வா! வா! உனக்குப் பிடிக்குமே... வண்ணம் தீட்டுகிறாயா?" என்றாள் பர்வீன்.

"ஓ!" ஆர்வத்துடன் அமர்ந்தான் அஜ்மல்.

"இறகின் நடுவில் எழுத இடம் விட்டு வண்ணம் தீட்டு அஜ்மல்" என்றாள் பர்வீன்.

"ஏன் அக்கா?" என்று கேட்டான் அஜ்மல்.

"அந்த இடங்களில் ஆங்கில மாதங்களின் பெயர்களை எழுதப் போகிறேன்" என்றாள் பர்வீன்.

"இது நாள்காட்டியா அக்கா?" என்று கேட்டான் அஜ்மல்.

"இல்லை. இது நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நினைவூட்டியா... புரியும்படி சொல்லேன் அக்கா" சிணுங்கினான் அஜ்மல்.

"இதை ஆசிரியரிடம் தருவேன். அந்தந்த மாதத்தில் பிறந்தவர்களின் பெயர்களை எழுதுவோம்." என்றாள் பர்வீன்.

"எதற்காக அக்கா?" என்றான் அஜ்மல்.

"மறக்காமல் வாழ்த்து சொல்லத்தான் இந்தப் பிறந்தநாள் நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நன்றாக இருக்கிறதே. எங்கள் வகுப்புக்கும் ஒன்று செய்யலாமா அக்கா?" என்றான் அஜ்மல்.

"ஓ, செய்யலாமே! இனி எல்லாரின் பிறந்தநாளிலும் மறக்காமல் வாழ்த்தலாம்".

படித்தும் எழுதியும் பழகுக!

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்சு	ஏப்ரல்
மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்டு
செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்

2nd_std_2nd_term_tamil.indd 83 31-03-2019 14:01:44

பயிற்சி

படித்துப் பழகுக

வண்ணம் நாள்காட்டி

நினைவூட்டி

பிறந்தநாள் வாழ்த்து

எழுதிப் பழகுக

பிறந்தநாள் வாழ்த்து ஜனவரி ஜூன்

ஜூலை செப்டம்பர் ஆகஸ்ட்

பொருத்தமான குறியிடுக – சரி ✓ தவறு ✗

1. பர்வீன் மயில் படம் வரைந்தாள். ☐
2. அஜ்மலுக்கு வண்ணம் தீட்டப் பிடிக்கும். ☐
3. பர்வீன் செய்தது நாள்காட்டி. ☐
4. நினைவூட்டியில் தமிழ் மாதங்களின் பெயர்களை எழுதினர். ☐

பொருத்துக

ABKI2C

1.	வண்ணம் தீட்டியது	–	பர்வீன்
2.	மயில் வரைந்தது	–	நினைவூட்டி
3.	பிறந்தநாள்	–	பன்னிரண்டு
4.	ஆங்கில மாதங்கள்	–	அஜ்மல்

வாய்மொழியாக விடை தருக

1. அஜ்மலும் பர்வீனும் பிறந்தநாள் நினைவூட்டியை எப்படியெல்லாம் உருவாக்கினார்கள்?

விடை எழுதுக

1. ஆங்கில மாதங்களில் முதல் மாதம் எது?
2. நீ பிறந்த ஆங்கில மாதம் எது?
3. ஆங்கில மாதங்களில் கடைசி மாதம் எது?

இதோ உங்கள் வகுப்புக்கான பிறந்தநாள் நினைவூட்டி

ஆங்கில மாதங்களையும் அம்மாதங்களில் பிறந்த நண்பர்களின் பெயர்களையும் எழுதுக.

குறுக்கெழுத்துப் புதிரில் ஆங்கில மாதங்களின் பெயர்களை நிரப்புக



2nd_std_2nd_term_tamil.indd 85 31-03-2019 14:01:44

14. ஓடி விளையாடு பாப்பா

NX1VUV

ஓடி விளையாடு பாப்பா – நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா – ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு – பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு –என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா –குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி – அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

– சுப்பிரமணிய பாரதியார்

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

2nd_std_2nd_term_tamil.indd 86 31-03-2019 15:13:56

பயிற்சி

ஒலித்துப் பழகுக

ஓடி விளையாடு

ஓய்ந்திருக்கலாகாது

கூடி விளையாடு

குழந்தையை வையாதே

கனிவு கொடுக்கும்

சாதிகள் இல்லை

உயர்ந்தமதி

படித்தும் எழுதியும் பழகுக

விளையாடு

வையாதே

கனிவு

உயர்ந்த மதி

குழந்தை

அன்பு

படிப்பு

பாட்டு

Z4T7G4

பாடலில் உள்ளபடி பொருத்துக

கனிவு கொடுக்கும்	விளையாட்டு
காலை	இல்லை
மாலை	மேலோர்
சாதிகள்	படிப்பு
அன்பு நிறைய உடையவர்	பாட்டு

பேசுவோம் வாங்க!

இப்பாடலில் பாரதியார் என்னென்ன கூறுகிறார்?

உரையாடலைக் கவனி. சரியான தொடருக்குக் ✓ குறியிடுக.

ராமு... கலாவுக்கும் வேடிக்கைப் பார்க்க ஆசையாக இருக்கும் அல்லவா? சண்டை போடாதே. அவளுக்கும் சன்னல் ஓரத்தில் இடம் கொடு

☐ இருவருக்கும் சன்னல் ஓரத்தில் அமர இடம் கிடைக்கவில்லை.

☐ ராமு சன்னல் ஓரத்தில் அமர்ந்து இருக்கிறான்.

☐ கலா சன்னல் ஓரத்தில் அமர்ந்து இருக்கிறாள்.

இந்தப் பூந்தோட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தவை மஞ்சள் வண்ணப் பூக்கள்

மஞ்சள் வண்ணப் பூக்கள் மட்டுமே அழகானவை. ☐

பூந்தோட்டத்தில் மஞ்சள் வண்ணப் பூக்கள் மட்டுமே உள்ளன. ☐

பூந்தோட்டத்தில் பல வண்ணப் பூக்கள் இருக்கின்றன. ☐

கோமதி, வழக்கமாக ஓட்டப்பந்தயத்தில் நான்தான் வெற்றி பெறுவேன். இந்தமுறை நீ வென்று விட்டாய். வாழ்த்துகள்!

☐ கோமதிக்கு ஓடத் தெரியாது.

☐ கோமதி வேகமாக ஓடுவாள்.

☐ கோமதி இந்தமுறை போட்டியில் கலந்துகொள்ளவில்லை.

அமுதா, நீ பாடுவதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். நேரம் போவதே தெரியவில்லை

அமுதாவுக்கு நன்றாகப் பாடத் தெரியாது. ☐

ஆனந்திக்கு அமுதாவின் பாடல்களைக் கேட்கப் பிடிக்காது. ☐

அமுதா நன்றாகப் பாடுவாள். ☐

அத்தையின் அன்புப் பரிசான கிளி பொம்மை உடைந்துவிட்டது. வருத்தமாக இருக்கிறது.

மரியாவின் வருத்தத்திற்கான காரணம்...

☐ மரியாவிடம் வேறு பொம்மைகள் இல்லாததால்

☐ அத்தை அன்பாகக் கொடுத்த பரிசு உடைந்ததால்

☐ அத்தை திட்டுவார் என்பதால்

2nd_std_2nd_term_tamil.indd 88 31-03-2019 14:01:46

15. ஆத்திசூடி

E5IJ9B

ஒரு குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன.
மீன் குஞ்சு ஒன்று அதன் அம்மாவுடன்
இரை தேடச் சென்றது.



அப்போது பெரிய புழு ஒன்றைக் கண்டது.
"ஆகா! நல்ல உணவு கிடைத்துவிட்டது,
அம்மா! நான் அதைப் பிடிக்கட்டுமா?" என்று
அம்மாவைக் கேட்டது மீன்குஞ்சு.

"சற்றுப் பொறு செல்லமே!
இதுபோன்ற புழுவை நான் இந்தக் குளத்தில்
இதுவரை கண்டதில்லை. அருகே சென்று
பார்ப்போம் வா" என்று கூறியது அம்மா மீன்.



புழுவின் அருகில் சென்று பார்த்தன. " அந்தப் புழு
எதிலோ மாட்டிக்கொண்டிருக்கிறது, அம்மா"
என்றது மீன்குஞ்சு.

"ஆமாம். இதுதான் தூண்டில். இதைக்
கவனிக்காமல் பிடித்திருந்தால் நாம் இதில்
மாட்டியிருப்போம்" என்றது அம்மா மீன்.

" இனி உங்களைப் போலவே நானும் கவனமாய்
இருப்பேன், அம்மா" என்றது மீன் குஞ்சு.
புரிந்துகொண்ட மீன் குஞ்சுக்கு அம்மாவிடம்
இருந்து முத்தம் ஒன்று பரிசாகக் கிடைத்தது.

பெரியாரைத் துணைகொள்

2nd_std_2nd_term_tamil.indd 89 31-03-2019 14:02:06

ஆத்திசூடி

2nd_std_2nd_term_tamil.indd 90 31-03-2019 14:02:07

ஆத்திசூடி

கேள்வி எழுந்தது   வழி பிறந்தது





கேள்வி முயல்

ஆத்திசூடி



வைகறை துயில் எழு

ஆத்திசூடி

வித்தை விரும்பு

2nd_std_2nd_term_tamil.indd 93 31-03-2019 14:02:11

பயிற்சி

படித்தும் எழுதியும் பழகுக

வைகறை துயில் எழு

பெரியாரைத் துணைகொள்

கேள்வி முயல்

இளமையில் கல்

வித்தை விரும்பு

ZJ36FS

உரிய தொடரைப் படத்துடன் பொருத்துக

இளமையில் கல்

கேள்வி முயல்

வைகறை துயில் எழு

வித்தை விரும்பு



தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்

பல்துலக்கி

குவளை

காலுறை

சீருடை

கழுத்துப்பட்டி

பொத்தான்

வெள்ளைத்தாள்

மட்டை

அழைப்புமணி

மின்விளக்கு

மெத்தை

நகரும் படிக்கட்டு

நிலைப்பேழை

வழலைக்கட்டி

கணினி

மடிக்கணினி

சுழல் நாற்காலி

தோள்பை

தொலைக்காட்சி

தொலைபேசி

வந்த பாதை

பொருத்தமான தொடருக்குக் ✓ குறியிடுக

- மீன் தண்ணீரில் நீந்துகிறது
- மீன் துள்ளிக் குதிக்கிறது
- மீன் தண்ணீரில் மிதக்கிறது

- வானூர்தி மேலே ஏறுகிறது
- வானூர்தி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது
- வானூர்தி கீழே இறங்குகிறது

- இது மாலை நேரம்
- இது இரவு நேரம்
- இது பகல் நேரம்

என்ன செய்கிறார்கள்? எழுதுக

மரம்

மரத்தில் ஒரு கூடு

கூட்டில் ஒரு பறவை

பறவை என்ன செய்கிறது?

தோட்டம்



தோட்டத்தில் ஒரு மலர்

மலரில் ஒரு வண்ணத்துப் பூச்சி

வண்ணத்துப் பூச்சி என்ன செய்கிறது?

ஆறு



ஆற்றில் நீர்



நீரில் மீன்

மீன் என்ன செய்கிறது?

எந்த வாகனம் எந்த விலங்கிற்கு உரியது? எழுதுக – காரணம் கூறுக

மான், பூனை, புலி, வரிக்குதிரை, ஒட்டகச்சிவிங்கி, சிறுத்தை



தொடரை நீட்டித்து எழுதுக

குடை

கருப்புக் குடை

பெரிய கருப்புக் குடை

தாத்தாவின் பெரிய கருப்புக் குடை

ஊஞ்சல்

_________ ஊஞ்சல் (மர/ இரும்பு)

_________ _________ ஊஞ்சல் (சிவப்பு/ மஞ்சள்)

_________ _________ _________ ஊஞ்சல் (பெரிய/ சிறிய)

மலர்

____

____

____

2nd_std_2nd_term_tamil.indd 97   31-03-2019 14:02:25

செய்திகளைப் படித்தறிக

முதல் எழுத்தை மாற்றி உணவுப் பொருளாக்குக

கடை	வடை
ஏரி	
ஆறு	
மோப்பம்	
தேர்	
வண்டல்	
உப்பளம்	
செங்கல்	
ஆசை	

2nd_std_2nd_term_tamil.indd 98 31-03-2019 14:02:27

என் நினைவில்

எப்படி உதவலாம்?

குட்டி எலி வெளியே வருவதற்கு இவற்றுள் எந்த வழியில் உதவலாம்? ✓ செய்க

வேறு எப்படி உதவலாம்? கலந்துரையாடுக

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 99 31-03-2019 14:54:02

விந்தை மனிதர்

பூசணிக்காய் தலையிலே
பச்சை மிளகாய் மூக்குதான்!
திராட்சை இரண்டு கண்களாம்
தக்காளிப்பழ வாய்தானாம்

பரங்கிக்காய் உடம்பிலே
புடலை இரண்டு கைகளாம்
வெண்டைக் காய்கள் விரல்களாம்
வெள்ளரிக்காய் கால்களாம்

காயும் பழமும் மனிதர்போல்
காண அழகு பாருங்கள்
நடனம் ஆடப் போகிறார்
நாமும் காண்போம் வாருங்கள்

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 100 31-03-2019 14:54:03

பொருத்தமான சொல்லை எழுதுக

லட்டு, மரம், ரோஜா,
மலை, மேசை,
மிட்டாய், வளையல்,
முயல்









பர்வீன்,
ஜ, ஹ, ஷ, ஸ, ஸ்ரீ
ஆகிய வரிசை
எழுத்துகளைக்
கொண்ட தன்
நண்பர்களின் பெயரை
எழுதுகிறாள்.

ஹரீஷ்
ஸ்ரீதர்
ஆயிஷா
ஜுலி
விஜயா
ஜாஸ்மின்

நீங்களும்
எழுதலாமே!

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 101 31-03-2019 14:54:04

யார் அவர்?

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 102
31-03-2019 14:54:07

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 103 31-03-2019 14:54:09

16. யாரு ? யாரு? யாரு?

AQUH21

கத்தரிக்காய்க்குக்
குடைபிடிக்கக்
கற்றுக்கொடுத்தது யாரு?

அந்தக் கடலைக்கொட்டைக்கு
முத்துச் சிப்பிபோல
மூடிவச்சது யாரு?

பருத்திச்செடிக்குப்
பஞ்சு மிட்டாயைத்
தின்னக்கொடுத்தது யாரு?

அந்த வாசனையில்லாக்
காகிதப் பூவுக்கு
வண்ணமடிச்சது யாரு?

ஆலமரத்துக்கு
அத்தனை ஊஞ்சலை
ஆடக்கொடுத்தது யாரு?

அந்தத் தொட்டாசிணுங்கி
பட்டுன்னு மூடிக்கக்
கட்டளை போட்டது யாரு?

யாரு? யாரு? கூறு
அந்த இயற்கை
அன்னையாம் பாரு

– வையம்பட்டி முத்துசாமி

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க – பாடி மகிழ்க.

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 104   31-03-2019 14:54:11

பயிற்சி

ஒலித்துப்பழகுக

கற்றுக்கொடுத்தது
மூடிவச்சது
தின்னக் கொடுத்தது
வண்ணமடிச்சது
ஆடக் கொடுத்தது
கட்டளை போட்டது
இயற்கை அன்னை

படித்தும் எழுதியும் பழகுக

கத்தரிக்காய்
கடலைக்கொட்டை
முத்துச்சிப்பி
பருத்திச்செடி
பஞ்சுமிட்டாய்
காகிதப்பூ
தொட்டாசிணுங்கி

பொருத்துக

1.	கத்தரிக்காய்	–	முத்துச்சிப்பி
2.	கடலைக்கொட்டை	–	ஊஞ்சல்
3.	பருத்திச்செடி	–	வண்ணம்
4.	ஆலமரம்	–	பஞ்சுமிட்டாய்
5.	காகிதப்பூ	–	குடை

PCAUUJ

கலந்துரையாடுக

இப்பாடலில் உனக்குப் பிடித்த வரிகள் எவை? ஏன் ?

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 105 31-03-2019 14:54:12

நம்மைச் சுற்றி...

தூங்குமூஞ்சி மரத்தின் இலைகளைக் கவனித்திருக்கிறீர்களா? காலையிலும் மாலையிலும் எப்படி இருக்கும்?

பட்டாசுக்காயைத் தண்ணீரில் போட்டால் என்ன நடக்கும்?



சூரியகாந்திப்பூக்களைப் பார்த்திருக்கிறீர்களா? அனைத்தும் ஒரே திசையை நோக்கி இருக்கும்.

பலமுறை சொல்லிப்பார். கிடைக்கும் சொல்லை எழுதுக.

தரிகத்

லைகட

சல்ஊஞ்

டைகு

டாய்மிட்

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 106 31-03-2019 14:54:13

17. சிறிய உருவம், பெரிய உலகம்!

SQYX2U

"ஓ குட்டி எறும்பே!
உன்னைவிடப் பெரிய
அரிசியை எப்படித் தூக்கிச்
செல்கிறாய்?

அடடே! பார்த்துக்கொண்டு
இருக்கும்போதே உள்ளே
சென்றுவிட்டாயே!

நானும் உன்னைப்போல்
சிறியதாக இருந்தால்
உன்னுடனேயே
வந்திருப்பேனே,
என்றாள் கண்மணி.

சட்டென்று அவளுடைய
உடல் அதிர்ந்தது.

உருவம்
சிறியதாகிவிட்டது.

சுற்றிலும் பார்த்தாள்.
எறும்பின் அளவுக்குத்
தானும் சிறியதாகி
இருப்பதைக்கண்டு
வியப்படைந்தாள்.



எறும்பு நுழைந்த புற்றுக்குள் இறங்க
முயற்சி செய்தாள். தடுமாறினாள்.
பொத்தென்று புற்றுக்குள் விழுந்தாள்.

"இந்தப்புற்றுக்குள் இத்தனை
அறைகளா? எறும்புகளின் சேமிப்பைக்
கண்டாள். எறும்புப் புற்றுக்குள் அங்கும்
இங்கும் சென்று பார்த்தாள்.

வியப்பு குறையாமல் புற்றைவிட்டு
வெளியே வந்தாள். அருகிலிருந்த
மரத்தடியில் அமர்ந்தாள்.

3rd_term_tamil_2nd _std_ CBSE.indd 107 31-03-2019 14:54:13